**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 13.10.2025**
**OS. No. 278/2013**
**வழக்கு சாட்சி PW.2–பழனிசாமி , த/பெ. செல்லப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி சின்னதம்பி தடம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியும், நானும் பங்காளிகள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும், எனக்கும் 20 வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல, அவர்களுக்கும், எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நானும், 2ம் பிரதிவாதி சேகர் என்பரும் கூட்டாக சேர்ந்து டிராக்டர் வாங்கி விவசாயம் செய்து வந்துள்ளோம் என்றால் சரிதான். அது சுமார் 20 வருடங்களுக்கு முன்பு என்றால் இருக்கலாம். அதன் பிறகு சேகரிடமே அந்த டிராக்டரை கொடுத்துவிட்டு, அதற்குண்டான பங்கை வாங்கிவிட்டு, புதியதாக டிராக்டர் வாங்கி விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். டிராக்டர் வைத்திருந்த சமயத்தில் நானும், 2ம் பிரதிவாதி சேகரும் எங்கள் ஊரிலுள்ள விவசாய நிலங்ளை ஓட்டி வந்தோம் என்றால் சரிதான்.

2) நான் புதியதாக டிராக்டர் வாங்கியபிறகு எங்கள் ஊரிலுள்ள விவசாய நிலங்களை டிராக்டர் ஓட்டுவது சம்மந்தமாக எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு, 20 வருடங்களாக பேசாமல் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. விருதாசம்பட்டி கிராமத்தில் இது தொடர்பாக 2ம் பிரதிவாதி டிராக்டரில் காட்டை ஓட்டி வந்த சமயத்தில் நான் தடுத்து பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. அந்த விரோதத்தில் தான் தற்போது வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க பொய்யாக சங்கதிகள் கொண்ட நிருபண சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ச.எண்.209/3ல் வண்டிப்பாதை எதுவும் இல்லை என்றும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக நிருபண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல, இரண்டு லாரிகள் செல்லும் அளவிற்கு பாதை உள்ளது.

3) நீதிமன்ற ஆணையர் அந்த சொத்தை அளந்து, ஆய்வு செய்தால் வண்டிப்பாதை உள்ளதா இல்லையா என்று நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் சரிதான். ச.எண்.209/3 க்கு கிழக்கில் தான் வாதியின் ச.எண்.209/4 ல் கண்ட சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். ச.எண்.209/3 க்கு தெற்குபுறம் உள்ள நிலமும் பிரதிவாதிகளின் விவசாய நிலம் என்றால் சரிதான். ச.எண்.209/3 க்கும், அதற்கு தெற்குபுறமுள்ள இடத்திற்கும் இடையே ஆடு, மாடுகளை கொண்டு செல்லும் பொலியாக பயன்படுத்தி வந்தார்கள் என்றும், அதன்பிறகு அந்த நிலத்தையும் பிரதிவாதிகள் போர்வீல் அமைத்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, வாதி மற்றும் பிரதிவாதிகள் இருவரின் காட்டையும் நான் ஓட்டியுள்ளேன். பிரதிவாதிகள் 20 வருடங்களுக்கு முன்பே டிராக்டர் வாங்கிவிட்டாகள் என்றும், அப்போதிலிருந்து அவர்கள் தான் அவர்களது காட்டை ஓட்டி வருகிறார்கள் என்றும், நான் பிரதிவாதிகளின் காட்டை ஓட்டி வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு தான் உடல்நிலை சரியில்லாத காரணமாக அவர்களது காட்டை ஓட்டுவதை நிறுத்தியுள்ளேன்.

4) ச.எண்.209/3 ல் 12 அடி அகலம், 142 மீட்டர் நீளம் கொண்ட வண்டிப்பாதை இருப்பதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றும், அவ்வாறு தற்போது எந்தவொரு வண்டிப்பாதையும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வண்டிப்பாதை அமைந்துள்ளதாக ஏதேனும் ஆவணங்களில் குறிப்படப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. நான் சொல்லும் நீள, அகலத்தில் வருவாய் ஆவணத்தில் ஏதேனும் குறிப்பிட்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியவில்லை. ச.எண்.209/4 ல் வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, கூரை வீடு உள்ளது. நான் கூரை வீடு உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் கூரை வீடு இருப்பதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5) ச.எண்.209/4 ல் தற்போது வாதி குடியுள்ளாரா என்றால் இல்லை. ச.எண்.209/4 க்கு 1.5 கி.மீட்டர் தாண்டியுள்ள வேறு ஒரு காட்டில் அமைந்திருக்கும் வீட்டில் தான் வாதி

வசித்து வருகிறார் என்றால் சரிதான், 1 கி.மீட்டர் தொலைவு இருக்கலாம். வாதியின் ச.எண்.209/4 க்கு வடபுறம் சென்னியப்பன் அவர்களின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு வடக்கே மூர்த்தி என்பரின் நிலம் உள்ளது என்றால் சரிதான். மூர்த்தி என்பவரின் நிலத்திற்கு வடக்கே ஏழுமலை என்பவரின் நிலம் உள்ளது என்றால் சரிதான். ஏழுமலை என்பவரின் நிலத்திற்கு வடக்கே வாதி சின்னதம்பியின் மகன் பாலமுருகன் பெயரில் உள்ள நிலம் அமைந்துள்ளது. அதற்கு வடக்கே ஆத்தூர் பைப்லைன் ரோடு அமைந்துள்ளது என்றால் சரிதான். பைப்லைன் ரோட்டை ஒட்டி வடபுறம் வாதி சின்னதம்பியின் மகன் பாலமுருகன் என்பவரது வீடு உள்ளது. மேற்கண்ட வீட்டில் தான் வாதி தற்போது வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்கண்ட வீட்டின் வழியாக அமைந்துள்ள மேற்கண்ட நபர்களின் நிலங்களை தாண்டிதான் வாதி தன்னுடைய நிலத்திற்கு சென்று வருகிறார் என்றால் சரியல்ல, பைப்லைன் ரோடு வழியாக வந்து, மல்லப்பனூர் – நங்கவள்ளி தார்ரோட்டை அடைந்து ச.எண்.209/3 ல் அமைந்துள்ள தடத்தின் வழியாகத்தான் தன்னுடைய ச.எண்.209/4 க்கு சென்று வருகிறார்.

6) தார் ரோட்டின் வழியாக சுற்றி வருவதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சின்னதம்பியின் வீட்டிற்கு கிழபுறம் மோட்டார் பம்ப் செட் உடன் கூடிய கிணறு ச.எண்.212/7 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றில் வாதி சின்னதம்பி தண்ணீர் எடுத்து கொண்டு, பிரதிவாதிகளை எடுக்க கூடாது என்று தடுத்தார் என்றும், வாதி சின்னதம்பியின் மீது நங்கவள்ளி காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. முந்தைய சாட்சியம் அளித்த பிறகும் கூட வாதிகள் மரத்தை வெட்டி அதை விற்க எடுத்து சென்றபோது பிரதிவாதிகள் தடுத்ததால் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் கொடுத்தாக சொல்கிறார்கள் எனக்கு முழுவதும் தெரியவில்லை. இது சம்மந்தமாக வாதி சின்னதம்பியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி சின்னதம்பி குடியுள்ள வீட்டிற்கு வடக்கு புறம் பொது கிணறு, அதற்கு ஒட்டி எனது விவசாய நிலம் மற்றும் வீடு உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதிகளின் வீடும், மேற்கண்ட ஆத்தூர் பைப்லைன் ரோட்டை ஒட்டி தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் அதே இடத்தில் குடியுள்ளதால் எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், பிரதிவாதிகள் மீது விரோதம் உள்ளதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யான சாட்சியங்களை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.